# மார்க்ஸின் பொருளாதாரக் கருத்துக்களின் முறையியல் உள்ளடக்கங்கள்

**கலாநிதி ஏ. எல். எம். றியால்**
முதுநிலை விரிவுரையாளர், மெய்யியல் பிரிவு
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில், இலங்கை

**மலர்:** 3

**இதழ்:** 4

**மாதம்:** ஏப்ரல்

**வருடம்:** 2019

ISSN: 2454-3993

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த கட்டுரை கார்ல் மார்க்ஸின் உழைப்புப் பிரிவினை, மூலதனத் திரட்டல், வர்க்கம் - வர்க்கப் போராட்டம் போன்ற முக்கிய பொருளாதாரக் கருத்தை விவாதிக்கிறது. முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பகுப்பாய்வு செய்ய மார்க்ஸ் ஒரு அறிவுசார் கட்டமைப்பை உருவாக்கினார், ஆனால் இந்த அறிவுசார் அபிலாஷை முக்கிய ஆங்கில மொழி பேசும் உலகில் மேலாதிக்க மெய்யியல் பாரம்பரியத்தில் வளர்ந்த சிந்தனையாளர்களால் மீள்வரையறைக்கு உட்படுத்தப்பட்டது, அல்லது ஓரளவு சிதைக்கப்பட்டது. மார்க்ஸிஸ்டுகள் கூட மார்க்ஸின் அரசியல் பங்களிப்பை மிகையாக வலியுறுத்துகின்றனர் ஆனால் அவருடைய பொருளாதார பங்களிப்பை குறைத்து மதிப்பிடுகின்றனர். முற்போக்கான சிந்தனையாளர்கள் இந்த போக்குகளை மாற்றியமைத்து மார்க்ஸின் மிகவும் பயனுள்ள பொருளாதார கருத்துக்களை மீண்டும் ஆய்வுக்குட்படுத்துவது முக்கியம் என்பது ஐயத்திற்கிடமற்றது என அவர்கள் நம்பினர். இவ்வாய்வுக் கட்டுரையானது கார்ல் மார்க்ஸின் மூல எழுத்துக்களையும் ஆய்வுகளையும் பயன்படுத்தியுள்ள அதேவேளை அவற்றின் மொழி பெயர்ப்புக்களும் பெரிதும் உதவியுள்ளதென்றே குறிப்பிடலாம். மார்கஸி சத்திலிருந்து நேரடியாக தொடர்பட்ட எண்ணக்கருக்களான உழைப்புப் பிரிவினை, மூலதனத் திரட்டல், வர்க்கம் - வர்க்கப் போராட்டம் போன்றவற்றில் மேலும் தெளிவினைக் காண்பதற்கும் தர்க்கரீதியாக தொடர்புகளைப் பரிசீலப்பதற்கும் இவ்வாய்வு முயல்கிறது.

**முக்கிய சொற்கள்: மார்க்ஸ், பொருளாதாரம், உழைப்புப் பிரிவினை, மூலதனத் திரட்டல், வர்க்கப் போராட்டம்**

## அறிமுகம்

1857 ஆகஸ்டிலிருந்து 1858 மே வரையில், தனது அரசியல் பொருளாதாரம் பற்றிய கருத்துக்களின் வெளிப்பாடாகிய “அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு” என்ற நூலை மார்க்ஸ் எழுதிமுடித்தார். இதுதான் மூலதனம் என்ற நூலின் முதல் வரைவு ஆகும் (பார்க்க, மார்க்ஸ் 1998, தொகுதி i, 24).

மார்க்ஸின் முக்கிய கண்டுபிடிப்புக்களான மனித சமூகத்தின் வளர்ச்சி விதிகள் (வரலாற்றுப் பொருள் முதல்வாதம்), இயக்கவியல் பொருள் முதல்வாதம் மற்றும் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையை ஆளும்

பொருளியல் இயக்க விதியான உபரி மதிப்புக் கோட்பாடு, உழைப்புப் பிரிவினை, மூலதனத் திரட்டல், வர்க்கம் - வர்க்கப் போராட்டம் முதலியவற்றை மூலதனம் உள்ளடக்கியுள்ளது. இக்கண்டுபிடிப்புக்கள் மூலம் மார்க்ஸ் மூலதனத்தில் முதலாளித்துவத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் அடிப்படையிலான முதலாளித்துவ நிறுவனங்கள் மற்றும் கருத்துக்க்களின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றின் மூலகாரணத்தை விளக்குகின்றார்.

மனிதனைப் 'பராதீனப்படுத்துவதற்கும்' (அந்நியப்படுத்துவதற்கும்) அவனை 'பேசும் கருவியாக' மாற்றுவதற்கும் வழிகோலக் கூடிய மனிதத்தன்மையற்ற நிலைமைகளை புரட்சிகரமான முறையில் அழித்தொழிப்பதற்கானதொரு பொருளாதார அடிப்படையை மூலதனத்தில் மார்க்ஸ் அளித்தார். "மனிதனை இழிவுபடுத்தும் நிலைகளுக்கு எதிரான போராட்டம், சுரண்டலுக்கு எதிரான போராட்டம் என்ற வகையில்தான் சாத்தியம்" எனக்கண்ட முடிவை தனது பொருளாதார ஆய்விலிருந்து அவர் வெளிப்படுத்தினார் (பார்க்க, Nikolai Ivunov: 1983:116).

மார்க்ஸிய சிந்தனை குறிப்பாக, ஜேர்மனிய மெய்யியல் மரபு, பிரான்ஸிய கற்பனாவாத சோஷலிஸ மரபு, பிரித்தானிய அரசியற் பொருளாதார மரபு ஆகியவற்றிற்கு நெருக்கமானதும், திட்டவட்டமானதுமான தொடர்புகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இது தொடர்பாக பிறிதொரு நிலைபாடும் உள்ளது. குறிப்பாக, மார்ஸின் சிந்தனைக்கு காரணகர்த்தாவாக (1) ஹெராக்ளிட்டஸ், (2) ரூசோ, (3) ஹெகல், (4) அடம்ஸ்மித் ஆகிய நான்கு ஆசான்கள் இருப்பதாக நவமார்க்ஸிஸ்ட்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். எவ்வாறாயினும், ஜெர்மனிய, பிரான்ஸிய, ஆங்கிலேய சிந்தனைகளின் செல்வாக்கு மார்க்ஸில் காணப்படுகிறது என்பது தெளிவு. மார்க்ஸ் தனது முறையியல் கருத்துக்களை உருவாக்க மேற்படி சிந்தனை மரபின் பெறுபேறுகளைத் துணை கொண்டதுடன், தன்கால விஞ்ஞான முறையியலின் வளர்ச்சியில் மலர்ந்த புதுமைகளையும் ஆதாரமாகக் கொண்டு இவற்றை மறுபரிசீலனைக்குள்ளாக்கினார்; விமர்சனத்திற்குட்படுத்தினார் எனக் கருதலாம்.

## உழைப்புப் பிரிவினை

பண்டைய காலத்தில் ஆண்கள், பெண்கள் என்ற இரு பாலாரிடையேதான் உழைப்புப் பிரிவினை இருந்தது. ஆண் வேட்டையாடினான்; மீன் பிடித்தான். பெண் வீட்டைக் கவனித்து வந்தாள். யாருக்கும் பிரத்தியேகமான தனி நலன்கள் எதுவும் இருக்கவில்லை. இதே நிலையில் மனிதன் நிரந்தரமாக இருந்துவிடவில்லை. மனிதனின் வாழ்க்கையில் பல மாறுதல்கள் உண்டாயின. இந்த மாறுதல்களுக்கு அன்றைய சமுதாய அமைப்பில் ஏற்பட்ட உழைப்புப் பிரிவினைதான் மூலகாரணமாக இருந்தது. இது பொது உற்பத்தி முறையிலே கொஞ்சம் கொஞ்சமாக நுழையத் தொடங்கியது. என்றைக்கு மனிதர்கள் பழகவும், பழகிய பிறகு வளர்க்கவும் பரிச்சயமான மிருகங்களைக் கண்டுபிடித்தார்களோ அன்றிலிருந்து உழைப்புப் பிரிவினை ஏற்பட்டது. இதுதான் சமுதாயரீதியில் ஏற்பட்ட முதல் உழைப்புப் பிரிவினைக்கு அடிப்படையென ஏங்கெல்ஸ் தமது 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் மூலம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, ஆதிகாலத்தில் தனித்தனியாகவும் ஒன்றையொன்று சார்ந்திராமலும் தனித்தியங்கிய உற்பத்தித் துறைகள் ஒன்றுக்கொன்று பண்டப்பரிமாற்றம் செய்ததிலிருந்தே உழைப்புப் பிரிவினை தோற்றம் பெற்றது. உழைப்புப் பிரிவினை சரக்கு உற்பத்திக்கு ஒரு இன்றியமையாத அடித்தளமாக அமைகிறது (மார்க்ஸ், 1998, தொகுதி ை, 68). இது தன்னியல்பாய் உதித்தெழுந்த அமைப்பாகும்; உற்பத்தியாளர்களின் முதுகுக்குப் பின்னால் இது வளர்ந்த வண்ணமுள்ளது. பரிவர்த்தனை செய்யப்படுவதற்கான சரக்கு புதிதாகத் தோன்றிய தேவைகளை நிறைவு செய்ய அல்லது தானே புதிய தேவைகளைத் தோற்றுவிக்கவும்கூட முனைகின்ற ஒரு புதியவகை உற்பத்திப் பொருளாகவும்

இருக்கலாம் (அ.நூ. 151). எனவே, இது வளர்ந்திருந்தால்தான் உற்பத்திப் பொருள் சரக்காக மாற முடியும். இவ்வழியில் உற்பத்திப் பொருள் பணமாக மாறுவதையும் அவசியமாக்குகிறது. உழைப்புப் பிரிவினை முரண்பாடுகளின் தொகுப்புத்தான் முழுச் சமுதாய பொருளாதார வரலாறாக அமைகின்றது. உழைப்புப் பிரிவினையானது செய்தொழில்களின் வேறுபாட்டிலிருந்து தொடங்குகிறது. இந்த வேறுபாடு ஒரே உற்பத்திப் பொருளின் தயாரிப்பை அநேகத் தொழிலாளர்கள் தம்மிடையே பிரித்துக் கொள்கிற பிரிவினையென்னும் நிலைக்கு வளர்கிறது.

குறிப்பிட்டளவு நாகரிகமடைந்துவிட்ட மக்கள் சமுதாயங்களில், மூன்று வகை உழைப்புப் பிரிவினைகளைக் காணலாம்.

1. பொது உழைப்புப் பிரிவினை: உற்பத்தியாளர்கள் இதன் மூலம் விவசாயிகளாகவும் பட்டறைக் காரர்களாகவும், கடைக்காரர்களாகவும் பிரிகிறார்கள். இந்தப் பிரிவினை நாட்டினது உழைப்பின் முப்பெரும் கிளைகளுக்கு இணையாகிறது.
2. குறிப்பான உழைப்புப் பிரிவினை: ஒவ்வோர் உழைப்புக் கிளையும் இதன் மூலம் பல்வேறு வகைகளாகப் பிரிகிறது.
3. வேலைப்பிரிவினை: இது தனிப்பட்ட வினைகளிலும் தொழில்களிலும் முளைவிட்டு வளர்கிறது. பெரும்பாலான பட்டறைகளிலும் ஆலைகளிலும் வேர்விடமுற்படும் இது, தொழிலாளியின் பிரத்தியேகப் பணியாகவும் அல்லது இயற்கையான திறமைகளை அடித்தளமாகக் கொண்டு உருவாகின்றது (மார்க்ஸ், 1998, தொகுதி 1, அடிக்குறிப்பு 477).

ஒரு குடும்பத்துள் இயல்பாகவே பால் மற்றும் வயது வேறுபாடுகளின் காரணத்தினால் உழைப்புப் பிரிவினை இயற்கையாகவே தோற்றம் பெறுகிறது. ஆதலால், இப்பிரிவினை முற்றிலும் உடற்கூறு அடிப்படையிலானதாகும். சமுதாயம் விரிவடைவதன் மூலமும், மக்கள் தொகை பெருகுவதன் மூலமும், இன்னும் முக்கியமாகக் குலங்களிடையேயான மோதல்கள், ஒரு குலம் இன்னொரு குலத்தை அடிமைப்படுத்துவது ஆகியவற்றின் மூலம், இப்பிரிவினை மேலும் மேலும் விரிவடைகிறது. மறுபுறம், நாம் ஏற்கனவே குறித்தபடி வெவ்வேறு குடும்பங்களும், குலங்களும், சமுதாயத் தொடர்பில் வரும் இடங்களில் உற்பத்திப் பண்டங்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. ஏனெனில், நாகரிகத்தின் தொடக்கம் தனியாட்கள் என்ற நிலையைச் சந்தித்ததில்லை, அவை குலங்கள், குடும்பங்கள் என்பவற்றோடு தொடர்புபட்டுத்தான் நடந்தன. இயற்கைச் சூழ்நிலையில் பல்வேறு மக்கள் சமுதாயங்கள் பலவகைப்பட்ட உற்பத்திச் சாதனங்களையும் வாழ்வுச் சாதனங்களையும் கொண்டிருந்தன. எனவே அவர்கள் தம் உற்பத்தி முறையும் வாழ்க்கை முறையும் வேறுபட்டிருந்த சமுதாயங்கள் தொடர்புகொள்ளும் போது உற்பத்திப் பண்டங்களில் பரஸ்பர பரிவர்த்தனையை நேரிடச் செய்வதும், அதன் மூலம் அந்த உற்பத்திப் பண்டங்களை சரக்குகளாக சிறிது சிறிதாக மாற்றமடையச் செய்வதும் தன்னியல்பாய் எழுகிற வேறுபாடே. உற்பத்தித் துறைகளுக்கிடையிலான வேறுபாடுகள் பரிவர்த்தனையால் வந்தவையல்ல. பரிவர்த்தனையானது, ஏற்கனவே வேறுபட்டிருப்பவற்றைத்தான் உறவுபடுத்துகின்றது; இது விரிவடைந்த சமுதாயத்தினுடைய கூட்டுப் பண“

மார்க்ஸின் கருத்துப்படி, உழைப்புப் பிரிவினையானது மனிதனின் அந்நியமாக்கப்பட்ட உற்பத்திச் செயலின் சமுதாய வெளியீட்டை முழுமையாக வெளியிடுகிறது. உழைப்புப் பிரிவினையுடன் தனிச்சொத்தும் தோன்றுகிறது. இவை இரண்டும் ஒரே முழுமையின் இரண்டு பகுதிகள். அதாவது, உழைப்புப் பிரிவினையே தனிச்சொத்துக்கான நிபந்தனை; தனிச்சொத்தே உழைப்புப் பிரிவினைக்கான நிபந்தனை. எனவே, இவை இரண்டும் ஒன்றுக்கொன்று இணையானவை என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார் (மார்க்ஸ், 1979: 89). அடம்ஸ்மித் உழைப்புப் பிரிவினை தொடர்பாக ஒரு புதிய வரையறையை நிறுவவில்லை என்பதையும் அவர் மிகத் திருத்தமான முறையில் விமர்சித்தார்.

தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, சமுதாயத்தின் உற்பத்தித் திறன் உழைப்புப் பிரிவினையின் விளைவுகளால் பெருக்கப்படும். இந்த அதிகரிப்பு கூட்டுவிகிதத்தில் விரிவடைகின்றன. குறிப்பிட்ட மக்கள் தொகையும் ஜன நெருக்கமும் சமுதாய உழைப்புப் பிரிவினைக்கு அவசியமான நிபந்தனையாகும். பொதுவாக சமுதாய உழைப்புப் பிரிவினை வளர்ச்சி நிலையை அடைந்த பிறகுதான் பட்டறைத் தொழிலில் உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்த முடியும். ஆனால், இங்கோ பட்டறைத் தொழில் சமுதாய உழைப்புப் பிரிவினை மீது செயற்பட்டு அதை வளர்த்துப் பெருக்குகிறது. உழைப்புக் கருவிகளின் வகை வேறுபாட்டுக்கு ஏற்ப இந்த உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்கிற வகைவேறுபாடு ஏற்படுகிறது.

சமுதாய உழைப்புப் பிரிவினை தொழிற்கிளையின் உற்பத்திப் பொருட்களை வாங்குவதாலும் விற்பதாலும் ஏற்படுவதாகும். பட்டறையில் நுணுக்க வேலைகளுக்கிடையிலான தொடர்பே, பல்வேறு தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி ஒரு முதலாளிக்கு விற்கப்படவும், அதை அவர் ஒன்றிணைந்த உழைப்புச் சக்தியாக பிரயோகிப்பதற்கும் ஏதுவாகிறது. உழைப்புப் பிரிவினை ஒரு முதலாளியின் கையில் உற்பத்திச் சாதனங்கள் ஒன்று குவிவதைக் குறிக்கிறது. சமுதாயத்தின் உழைப்புப் பிரிவினைப் பல சுயேச்சையான சரக்கு உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் பிரிந்து போவதையும் குறிக்கிறது. பெரும்பாலானோர் விஷயத்தில் இந்த விசைப் பொறி, தொழிலாளியை உடலிலும் உள்ளத்திலும் வெளிப்படையாக முடமாக்குவது மூலமே செவ்வைப்படுத்துகிறது. நவீன தொழில்துறையின் யந்திரங்கள் தொழிலாளியை யந்திரம் என்ற நிலையில் இருந்து ஒரு யந்திரத்தின் வெறும் பின்சேர்ப்பு என்ற அளவுக்குத் தரம் தாழ்த்துகின்றன. ஒரே கருவியைக் கையாளுவதிலான வாழ்நாள் முழுவதிலுமான தனித்திறமை இப்போது அதே ஒரே யந்திரத்திற்கு வாழ்நாள் முழுவதிலுமான சேவை செய்யும் தனித்திறமையாகிறது. தொழிலாளியை, அவனது குழந்தைப் பருவம் தொட்டே, யந்திரத்தின் பகுதியாக உருமாற்றம் செய்யும் நோக்கத்துடன் யந்திரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என மார்க்ஸ் குறிப்பிட்டார் (அ.நூ.515). தொழிலாளர்கள் மட்டுமன்றித் தொழிலாளர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ சுரண்டிவாழும் வர்க்கங்களும்கூட, உழைப்புப் பிரிவினை மூலம், செயல்பாட்டுக் கருவிக்கு அடிமைப்படுத்துகிறது. ஒரு மனிதனை உட்பிரிவினை செய்வதென்பது மரண தண்டனை வழங்குவதற்குச் சமம். உழைப்பின் உட்பிரிவினை என்பது நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதற்கு ஒப்பானது என மூலதனத்தில் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

இந்நடவடிக்கை தொழிலாளியின் நன்மைக்காக அல்லாமல், முதலாளியின் நன்மைக்காக அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல், தனிப்பட்ட தொழிலாளர்களை சடமாக்கியே இதைச் செய்வதுடன் உற்பத்திப் பொருளையும், உற்பத்தியாளரையும் மேம்படுத்துவதற்கும் துணை செய்யும். இதனால் இவ்வுழைப்புப் பிரிவினை குறிப்பிட்ட அளவு உழைப்பைக் கொண்டு கூடுதலான சரக்குகளை உற்பத்திச் செய்வதற்கும் இதன் மூலம் சரக்குகளை மலிவாக்கி மூலதனத் திரட்டலை (Accumulation of capital) விரைவுபடுத்தவும் முற்படுகிறது.

## மூலதனத் திரட்டல்

முதலாளித்துவ உற்பத்தி முறை, ஒருபுறம் முதலாளிகளும் மறுபுறம் கூலித் தொழிலாளிகளும் இருப்பதை முன்நிபந்தனையாகக் கொண்டது. இம்முறையானது, முதலாளியின் மூலதனத்தை மீண்டும் மீண்டும் இடைவிடாது மறு உற்பத்தி செய்து கொள்வதுடன் அதே சமயத்தில் தொழிலாளர்களுடைய ஏழ்மையை மீண்டும் மீண்டும் இடைவிடாது மறுஉற்பத்தி செய்கின்றது. இதனால், வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்கள், மூலப்பொருட்கள், உழைப்புக் கருவிகள் போன்றவற்றின் உடமையைக் கொண்டிருக்கும் முதலாளிகள் ஒருபுறத்திலும், தாம் வேலை செய்து வாழ்வதற்கும், வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற்குமெனத் தம் உழைப்புச் சக்தியை அம்

முதலாளிகளுக்கு விற்கும்படியான கட்டாயத்திலுள்ள தொழிலாளிகளைக் கொண்டுள்ள பெருந்திரள் மறுபுறத்திலும் இருப்பதை எப்போதும் நிலைத்து வருவதை உத்தரவாதம் செய்யப்படுகிறது. ஆனால், மூலதனம் மறு உற்பத்தி செய்யப்படுவது மட்டுமல்ல, அது தொடர்ந்து வளர்கின்றது. அதற்கேற்றாப்போல தொழிலாளியின் மீதும் அதனுடைய ஆதிக்கம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. மேலும், மேலும் அதிகமான அளவில் மூலதனம் மறுஉற்பத்தி செய்யப்படுவதைப்போலவே நவீன முதலாளித்துவ முறையானது, அதிகமான அளவிலும் எண்ணிக்கையிலும் சொத்தற்ற தொழிலாளிகளை சிருஷ்டிக்கிறது (மார்க்ஸ், ஏங்கெல்ஸ், 1986, தொகுதி vi, 44).

உபரி மதிப்பை உற்பத்தி செய்கின்ற முதலாளி இந்த உபரிமதிப்பை முதலில் தனதாக்கிக் கொள்கின்றானே தவிர அவன் அதன் முடிவான உடைமையாளன் அல்லன். சமுதாயப் பொருளுற்பத்திக் கட்டமைப்பில் ஏனைய பணிகளை நிறைவேற்றுகின்ற முதலாளிகள், நிலவுடையாளர்கள் போன்றொருடன் மூலதனத்தை பகிர்ந்து கொண்டாக வேண்டும். எனவே உபரிமதிப்பு பல்வேறு துண்டுகளாகப் பிளவுறுகிறது. இந்தத் துண்டுகள் பல்வேறு வகையினருக்கும் உரித்தாகி இலாபம், வட்டி, வணிக இலாபம், நிலவாடகை போன்ற ஒன்றையொன்று சாராத பல்வேறு வடிவங்களை அடைகின்றன (அ.நூ. 759).

முதலாளித்துவம் உதிப்பதற்கு வரலாற்று வழியில் அவசியமான முன்நிபந்தனைகள் உருவாக்கப்படும் நிகழ்ச்சிப் போக்குக்கு புராதன மூலதனத் திரட்டல் (Primitive accumulation of capital) என்று பெயர். முதலாளித்துவ மூலதனத் திரட்டலுக்கு (Capitalist accumulation) முற்பட்ட நிகழ்ச்சிப்போக்கு என்பதால் இது இவ்வாறு அழைக்கப்படுகின்றது (லெவ் லியோன்டியெவ், 1975: 79). புராதன திரட்டல் பற்றி கார்ல் மார்க்ஸ் குறிப்பிடும்போது: “இறையியலில் ஆதிப்பாவம் வகிக்கும் அதே பாத்திரத்தை அரசியற் பொருளாதாரத்தில் ஆதித்திரட்டல் (புராதனத் திரட்டல்) வகிக்கிறது எனலாம். ஆதாம் கனியைக் கடித்தான்; உடனே மனித இனத்தின் தலையில் பாவம் விழுந்தது. இது பழங்காலக் கதையாகச் சொல்லப்படும் போது, பாவத்தின் தோற்றுவாயை விளக்கப்படுவதாய்க் கொள்ளப்படுகிறது. நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னர் மக்கள் இருவகைப்பட்டோராய் இருந்தனர்; தளரா ஊக்கமும் மதிநுட்பமும், யாவற்றுக்கும் மேலாக, சிக்கனமும் வாய்ந்த மேன்மக்கள் ஒருவகை; தறிகெட்ட வாழ்க்கையில் தம்மிடம் இருப்பதை எல்லாம் ஒழித்துக் கட்டி அதற்கு மேலே செலவளிக்கும் சோம்பேறித் தடியர்கள் இன்னொருவகை. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப்பட்டு, உணவருந்த வேண்டுமென மனிதன் சபிக்கப்படலானான் என்பதை இறையியல் ஆதிபாவம் பற்றிய புராணக் கதை நமக்குத் தெளிவாய் சொல்லுகிறது; ஆனால், இப்படிப் பாடுபட்டுத்தான் சாப்பிட்டாக வேண்டும் என்ற அவசியம் இல்லாதவர்களும் உண்டு என்பதைப் பொருளாதார ஆதிபாவம் பற்றிய வரலாறு நமக்குப் புலப்படுத்துகிறது. இது கிடக்கட்டும்! இப்படியாக, முதல்வகைப்பட்டோர் செல்வந் திரட்டிச் செல்ல, இரண்டாம் வகைப்பட்டோர் இறுதியில் தம் தோளைத் தவிர விற்பதற்கு ஒன்றுமில்லாத நிலையை வந்தடைந்தார்கள். எவ்வளவோ பாடுபட்டு உழைத்தும் கூட இன்றுவரை நம்மைத்தவிர விற்பதற்கு எதுவுமில்லாத மிகப் பெரும்பாலார் வறுமையில் உழல்வதும், உழைப்பதை நிறுத்தி நீண்டகாலமாகிவிட்ட போதிலும் ஒரு சிலரது செல்வம் ஓயாது மேலும் மேலும் பெருகிச் செல்வதும் இந்த ஆதி பாவத்திலிருந்தே தொடங்குகின்றன” (மார்க்ஸ், 1998, தொகுதி I, 958).

மூலதனத்தின் புராதன திரட்டல் குறிப்பதெல்லாம் நேரடி உற்பத்தியாளர்களின் உடைமை பறிப்பையே மையமாகக் கொண்டிருக்கும். இவ்வாறு இது கொண்டிருப்பதால் அடிமைகளையும் பண்ணையடிமைகளையும் நேரடியாக கூலித் தொழிலாளர்களாக மாற்றும் வடிவமாற்றமாகவும் இருக்கும்.

உபரி மதிப்பின் திரளை நிர்ணயிக்கும் எல்லாக் காரணிகளுமே மூலதனத் திரட்டலின் பருமனையும் நிர்ணயிக்கிறது. உபரி மதிப்பு இல்லையேல் மூலதனத்திரட்டல் இல்லை. மூலதனத்திரட்டல் இல்லையேல் மூலதனத்குவிப்பும் மூலதன மையப்பாடும் இல்லை. எனவே வளர்ந்து செல்லும் மூலதனத் திரட்டல் வளர்ந்து செல்லும் மூலதனக் குவிப்பை குறிக்கும் (அ.நூா. தொகுதி iii, 350). முதலாளித்துவ பொருளுற்பத்தி இல்லையேல் உபரி மதிப்பு இல்லை. சரக்கு உற்பத்தியாளர்களின் கையில் மூலதனம் மற்றும் உழைப்புச் சக்தியின் கணிசமான திரள்கள் இல்லையேல் முதலாளித்துவப் பொருளுற்பத்தி இல்லை. எனவே, இந்த இயக்கம் முழுவதும் சுற்றிச் சுற்றிப் புறப்பட்ட இடத்திலேயே திரும்பி வரும் சுழல்வட்டமாகத் தோன்றுகின்றது. முதலாளித்துவத் திரட்டலுக்கு முன் ஒரு புராதன திரட்டல் அதாவது முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையின் விளைவாக ஏற்பட்டதால் அது அதன் தொடக்கச் சாதனமாய் இருந்தது (அ.நூா.தொகுதி, ii: 958).

இந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பெருஞ்சிறப்பு என்னவென்றால், அது கூலித்தொழிலாளியைக் கூலித் தொழிலாளியாகவே தொடர்ந்து மறுவுற்பத்தி செய்வதோடு நிற்பதில்லை; மூலதனத் திரட்டலுக்கேற்ற விகிதத்தில் கூலித் தொழிலாளியின் உபரி மக்கள் தொகையையும் உற்பத்தி செய்கின்றது. எனவே மூலதனத் திரட்டலின் இடையறாத வளர்ச்சியும் துரிதகதியுமே கூலியுயர்வுக்கு இட்டுச் செல்கின்றன. மூலதனத் திரட்டல் நிகழ்முறையின் பொறியமைவே மூலதனத்தை அதிகமாக்குவதோடு கூட உழைக்கும் ஏழைகளின் கூலித்திறனையும் அதிகமாக்குகிறது. அவ்வாறே, கடந்தகால உழைப்பு எப்போதுமே மூலதனதமாக மாறுவேடம் தரிக்க முற்படும். கடந்தகால உழைப்பை உயிருள்ள உழைப்பு ஆட்கொண்டு உயிரூட்டும்போது, கடந்தகால உழைப்பின் சேவை மூலதனத்திரட்டலின் முன்னேற்றத்துடன் சேர்ந்து மேலும் மேலும் வளர்ந்து பெருகிறது.

உபரிமதிப்பு சரக்கின் உற்பத்தியை அதிகமாக்குவதற்கான வழிமுறையாகும். இதில் ஒருபகுதி வருவாயாகச் செலவிடப்படுகிறது. மற்றொரு பகுதி மூலதனமாக மாற்றப்படுகிறது. மெய்யான மூலதனத்திரட்டல் சாத்தியமாவதும் இந்த அடிப்படையில்தான் என்றார் மார்க்ஸ் (அ.நூா. தொகுதி ii, 669). குறிப்பிட் அளவுக்கு மூலதனம் திரட்டப்படுவது முதலாளித்துவ முறையிலமைந்த பொருளுற்பத்திக்கு இன்றியமையாத தேவையென்றால், மறுதலையாக இப்பொருளுற்பத்தி மூலதனத்தை முடக்கிவிடுகிறது. எனவே, மூலதனத் திரட்டலைத் தொடர்ந்து முதலாளித்துவ முறையிலமைந்த பொருளுற்பத்தி வளர்கிறது.

மூலதனத்தின் தொழில்நுட்ப இயல்பால் ஏற்படுத்தும் மாற்றம் மூலதனத்தின் மாறாப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மாறும் பகுதியை மேலும் மேலும் சிறியதாக்கி மாற்றத்துக்கு இட்டுச் செல்லும். எனவே மூலதனத்திரட்டலானது தொழில்நுட்ப அடிப்படையை மாற்றாத உற்பத்தி வரிவாக்கத்துக்காக இடைக்கிடையில் இயங்கும் தன்மை கொண்டதாகவும் அமையும். அவ்வாறே மூலதனத் திரட்டல் வளர வளர அதற்கேற்ப சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் உயர உயர, இலாப வீதம் குறைந்து செல்கிறது. சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்வதானது மூலதனத்தின் மாறாப்பகுதியோடு ஒப்பிடுமிடத்து ஒப்பளவில் மாறும்பகுதி தொடர்ச்சியாகக் குறைந்து செல்வது துல்லியமாக வெளிப்படும் (அ.நூா தொகுதி iii, 554).

**மூலதனத் திரட்டலினை நிர்ணயிக்கும் காரணங்கள்**

1. உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்: உழைப்புச் சக்தி மீதான சுரண்டல் தொழிலாளியின் தொகையால் நிர்ணயிக்கப்படுகிறது; இத்தொகை வெவ்வேறு விகிதாசாரத் தன்மை கொண்டதாய் இருப்பினும் மூலதனத்தின் பருமனுக்கு இசைவானதாக செயற்படும். உழைப்புச் சக்தியை

அதிக தாக்கத்துள்ளாக்கி பெறப்படும் கூடுதல் உழைப்பு, மூலதனத்தின் மாறாப் பகுதியை அதிகரிக்காமலேயே உபரி உற்பத்தியையும் உபரி மதிப்பையும் அதாவது, மூலதனத் திரட்டலையும் அதிகமாக்குகிறது.

2. சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன்: உழைப்பின் உற்பத்தித் திறன் உயரும் போது, உற்பத்திப் பண்டத்தின் திரள் அதிகமாகிறது. இதன் மூலம் அதன் மதிப்பும் அதிகமாகும். எனவே, குறிப்பிட்ட பருமனுள்ள உபரி மதிப்பு, இதில் உள்ளடங்கும். உபரி மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போது, ஏன்? குறையும்போதும் கூட உபரி உற்பத்தி பண்டத்தை அதிகரிக்கச்செய்கிறது.
3. ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் தொகைக்கும் நுகரப்படும் மூலத்தனத்தின் தொகைக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்தல்: மூலதனம் அதிகரிக்கும் போது, ஈடுபடுத்தப்படும் மூலதனத்திற்கும் நுகரப்படும் மூலதனத்திற்குமிடையிலுள்ள வேறுபாடு அதிகரிக்கும். அவ்வாறு மூலதனம் குறையும்போது, அவ்வேறுபாடு குறையும்.
4. முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமன்: இவை பெருகினால் பொருளுற்பத்தியின் அளவு வீதம் விரிவடைவதுடன் இயங்கு விசைகளது விரிவாக்கத் திறன் வளர்கிறது (அ.நூ. 804-815).

மேற்படிக்காரணங்களால் மூலதனத் திரட்டல் வளர்ந்தோங்குகின்றது. அதேபோல், முதலாளித்துவ பொருளுற்பத்தி விரிவடைவதால் ஒருபுறம் அதிகமான தொழில் முயற்சிகளிற்கான சமூகத் தேவைகளும் மறுபுறம் அம் முயற்சிகள் ஈடேறுவதற்கான தொழில்நுட்ப சாதனங்களும் ஒரேநேரத்தில் இரு பக்கத்திலிருந்து செயற்படுகின்றது. அதன் திரட்டல் ஒருபக்கத்தில், உழைப்புக்கான வேண்டலை அதிகமாக்கிறது. மறு பக்கத்தில் உழைப்பின் வழங்கலை அதிகமாக்குகிறது.

உபரி மதிப்பின் உற்பத்திக்கான வழிமுறைகளெல்லாம் மூலதனத் திரட்டலுக்கான வழிமுறையுமாகும். திரட்டலின் ஒவ்வொரு வளர்ச்சியும் திரும்பவும் அந்த வழிமுறைகளின் வளர்ச்சிக்கான சாதனமாகிறது. ஆகவே, மூலதனத் திரட்டல் எந்தளவிற்கு நடைபெறுகின்றதோ அந்தளவிற்கு தொழிலாளியின் கதி மேலும் மோசமடைந்தே தீரும். இது கூடவே துன்ப துயரங்களையும் அதே அளவுக்குத் திரளச் செய்கிறது.

ஒருமுனையில் செல்வம் திரள்வதானது, எதிர்முனையில் அதாவது தனது சொந்த உழைப்பினால் பொருளை உற்பத்தி செய்யும் வர்க்கத்தின் துன்ப துயரமும், உழைப்பின் வேதனையும், அடிமை நிலைமையும், அறியாமையும், கொடுமையும், சிந்தனை இழிநிலையையும், சுரண்டலையும் இவை குறிக்கும் என மார்க்ஸ் அபிப்பிராயப்படுகிறார் (K.Mar x, 1961, Vol. I, 671).

முதலாளித்துவத் திரட்டலில் இந்தப் பகைமைத் தன்மையை அரசியல் பொருளாதார அறிஞர்கள் பலவிதமாகவும் குறிப்பிடுகின்றார்கள். ஆனாலும் அடிப்படையில் வேறானவையாகிய புலப்பாடுகளோடு முதலாளித்துவத்திற்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளுக்கும் உரித்தான புலப்பாடுளுடன் அவர்கள் இதனை குழம்பும்படி செய்கிறார்கள் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார் (அ.நூ. 868, 869).

முதலாளித்துவ அடிப்படையிலான செல்வப் பெருக்கத்தின் இன்றியமையாத விளைவாய் இருக்கும் உபரியான உழைக்கும் மக்களின் தொகை, முதலாளித்துவ திரட்டலின் நெம்புகோலாகின்றது. அதுமட்டுமன்று, முதலாளித்துவ பொருளுற்பத்தி முறை நிலவுவதற்கான நிர்ப்பந்தத்தையும் கொடுக்கிறது. மூலதனத் திரட்டலின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து சமுதாயச் செல்வத் திரள் பெருகுகிறது. இதனை கூடுதல் மூலதனமாகவும் மாற்ற முடியும். மூலதனத் திரட்டல் முன்னேற உழைப்புக்கான தேவையும் அதற்கேற்ப வளர்கிறது.

**வர்க்கம் - வர்க்கப் போராட்டம்**

இருதுருவ வேறுபாடுடைய, கூர்மையடைந்து செல்லும் இரு முகாம்கள் என்ற கருத்து வர்க்கம் பற்றிய எளிமையான விளக்கமாகும் (எம்.எஸ்.எம். அனஸ், 1997:19). வர்க்கங்களைப் பற்றிய அறிவு சமுதாயத்தில் மக்களுடைய மெய்யான உறவுகளைப் பற்றிய தெளிவான ஆய்வினைப் பெறுவதற்கும், சமூகவாழ்வின் ஒவ்வொரு வர்க்கத்துக்குமுள்ள இடத்தையும் அதன் சாராம்சம், அதன் லட்சியங்கள், நலவுரிமைகள் ஆகியவற்றை புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பினைக் கொடுக்கிறது. வர்க்கம் என்பது உற்பத்தி முறையுடன் மனிதர்கள் தங்களுக்குள்ள உறவை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாயப் பிரிவு ஆகும். மார்க்ஸ் சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினையின் காரணங்களையும் சாராம்சத்தையும் கண்டுபிடித்தார்.

நவீன சமூகக் கோட்பாடுகளில் வர்க்க எண்ணக்கரு குறிப்பிடத்தக்க அர்த்தத்தை 19ம் நூற்றாண்டில் பெற்றது. சமூகசந்தர்ப்பத்தில் வர்க்க எண்ணக்கருவை ஆழமாக முன்வைத்ததில் மார்க்ஸின் பங்கு முக்கியமானது. ஏழை பணக்காரன் என்று வர்க்க முரண்பாடு கூர்மையடைந்து வருவதையும் சமூகத் தகமைக்குச் சொத்துடமை பிரதான காரணியாக அமைந்துள்ளதென்பதையும் மார்க்ஸ் எடுத்துக்கூறினார். மார்க்ஸ் வர்க்கம், வர்க்கப் போராட்டம் என்ற கருத்துக்களை சமூக மாற்றத்தைக் கண்டறிய உதவும் பிரதான எண்ணக்கருவாக கருதினார் (எம்.எஸ்.எம். அனஸ், 1998: 56).

மார்க்ஸ் முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பைப் பற்றி தெளிவாக ஆராய்ச்சிகளைச் செய்தார். அதனடிப்படையில் அவர் சில முடிவுகளுக்கு வந்தார். சமுதாயங்கள் வர்க்கங்களாகப் பிரிந்திருக்கின்றது என்பதை மார்க்ஸ் மட்டும் குறிப்பிடவில்லை. அவருக்கு முன்னரே வர்க்கக் கோட்பாடு எடுத்துக்கூறப்பட்டிருந்தது. ஆனால் மார்க்ஸ் தமது பங்கிற்கு அக்கோட்பாட்டில் முன்வைத்த சிந்தனைகளும் சமுதாய நோக்கில் அதனைப் பகுப்பாய்வுக்கும் விளக்கத்திற்கும் உரியதாக்கிய விதமே வர்க்க எண்ணக்கருவை ஆழ்ந்த சிந்தனைகுரியதாக்கியது. இதனை மார்க்ஸின் வார்த்தைகளில் புரிந்துகொள்ள முடியும். ஜே. வைய்ட்மேயருக்கு மார்ச் - 5, 1852ல் எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: “இப்போது என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவற்றின் இடையே போராட்டம் நடைபெறுவதையோ கண்டுபிடித்த பெருமை எதுவும் எனக்கு உரியது அல்ல. எனக்கு நீண்ட காலத்துக்கு முன்பே, முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டங்களின் வரலாற்று வளர்ச்சியை வர்ணித்திருக்கிறார்கள். மற்றும் முதலாளித்துவ பொருளியலாளர்கள் வர்க்கங்களின் பொருளாதார அமைப்பியலை விரித்துரைத்திருக்கிறார்கள். நான் புதிதாகச் செய்தது என்னவென்றால், (1) வர்க்கங்களின் இருத்தல் என்பது பொருளுற்பத்தியின் வளர்ச்சியிலான குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் கட்டுண்டவை என்பதையும், (2) வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதவகையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகரத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதையும், (3) இந்த சர்வாதிகாரம் தான்மட்டுமே சகலவித வர்க்கங்களின் ஒழிப்பு மற்றும் வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கான மாறுதல் கட்டமாக அமைகிறது என்பதையும் நிரூபித்துக் காட்டியதேயாகும்” (மார்க்ஸ், ஏங்கெல்ஸ், 1985, vol. iv: 232).

சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பது நிரந்தரமானதல்ல. சமுதாயத்தின் ஒரு பகுதியினர் தங்கள் கையில் அடிப்படை உற்பத்திச் சாதனங்களைக் குவித்துக் கொண்டு மற்றவர்களுக்கு அதனை மறுக்கும் போதே வர்க்கப் பிரிவினை நிகழ்கிறது. வர்க்கங்களின் மூலத் தோற்றம் உற்பத்தி வளர்ச்சியின் ஒரு கட்டத்துடன் தொடர்புடையது. தனிச் சொத்துடமை தோன்றியபோது புராதனச் சொத்துடமைச் சமுதாயம் மறைந்து ஆண்டான்-அடிமை உற்பத்தி முறை ஏற்பட்ட சமுதாய

உற்பத்திக் கட்டத்துடன் இணைந்ததாகும். எல்லாச் சமுதாயங்களிடையேயும் வர்க்கங்களின் மூலத் தோற்றத்திற்கு புறநிலையான சமுதாய பொருளாதார நிலைமைகள் உள. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, உபரி உற்பத்தி, வேலைப் பிரிவினை, பண்ட உற்பத்தி, பண்டமாற்று தனிச் சொத்துடமையின் தோற்றம் என்பன காரணமாகின்றன என மார்க்ஸ் கருதினார்.

உற்பத்தி முறைகள் மாறியதைத் தொடர்ந்து சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பும் மாறியது. சில வர்க்கங்கள் சமுதாய கட்டத்தை விட்டுச் சென்றது. மற்றவை தாண்டி முன்னோக்கி உயர்ந்து சென்றது. ஆண்டான்-அடிமை வர்க்கங்களைத் தொடர்ந்து அதற்கடுத்தாற்போல் நிலப் பிரபுக்களும்-குடியானவர்களும் தோன்றினார்கள். பின்னர் பூர்ஷுவா வர்க்கத்தினரும், பாட்டாளிகளும் வந்தனர். புதிய வர்க்கங்களின் தோற்றம் எப்போதும் புதிய சமூகப் பொருளாதார உறவுகளின் விளைவாகவே ஏற்பட்டது.

வர்க்கம் சமூகத்தின் சிக்கல்வாய்ந்த தோற்றப்பாடாகும். எதிர்நிலையிலுள்ள வர்க்கங்களது போராட்டங்களுக்குரிய புறநிலைக் காரணங்களையும் உழைப்பாளி வர்க்கங்களினது ஒத்துழைப்புக்கான நிபந்தனைகளையும் வர்க்கங்கள் அற்ற சமூகத்தை நிறுவுவதற்குரிய வழிமுறைகளை மார்க்ஸ் வெளிப்படுத்தினார்.

அவ்வாறே வர்க்கங்களின் சமூக-பொருளாதார இயல்புகள் பற்றி மிக முழுமையான வரையறுப்பு "மாபெரும் முன்முயற்சி" எனும் நூலில் லெனினும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'வரலாற்றுப் போக்கில் திட்டவட்டமான சமூக உற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்துக்கு ஏற்பவும் உற்பத்திச் சாதனங்கள் பால் அதற்குள்ள உறவுகளுக்கேற்பவும் உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவை ஆற்றும் பங்குக்கேற்பவும் அவற்றின் இயல்புள்ளன. எனவே, தங்களிடம் உள்ள சமூக செல்வத்தின் எந்தளவு பங்கை எம்முறையில் பெற்றிருக்கின்றன என்பதற்கேற்பவும் தமக்குள் வேறுபடுகின்ற பெரிய மக்கள் குழக்கள் வர்க்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன என லெனின் எழுதினார். மேற்படி வியாக்கியாணம் வர்க்கங்களுள் காரணமாக விளங்கும் நான்கு முக்கிய அம்சங்களை சிறப்பாகச் சுட்டிக் காட்டுகின்றன.

1. சமுதாய உற்பத்தியின் ஒரு குறிக்கப்பட்ட திட்டவட்டமான வரலாற்று அமைப்பு முறையில் வகிக்கும் இடம்,
2. உற்பத்தி சாதனங்கள்பால் வர்க்கங்களின் உறவு,
3. உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பின் வர்க்கங்கள் ஆற்றும் பங்கு,
4. வருமானம் பெறப்படும் முறையும் அதன் அளவும்.

முதல் அம்சம் சமுதாய உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான வரலாற்று அமைப்பு முறைகளில் ஒரு குறித்த வர்க்கம் வகிக்கும் இடமும் அது ஆற்றும் பங்கும் உற்பத்திச் சாதனங்களின்பால் அதற்குள்ள உறவினாற் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வர்க்கமும் ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான உற்பத்தி முறையால் தோற்றுவிக்கப்படுகிறது. இந்த உற்பத்தி முறைக்குள் உற்பத்தி உறவுகளின் ஆதிக்கத்தின் அடிப்படையிலும் அடிமைப்படுத்துவதன் அடிப்படையிலும் முதன்மையான வர்க்கங்கள் நேரெதிரானவைகளாக இருக்கின்றன.

மனிதர்கள் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பது வரலாற்று நிகழ்ச்சி ஆகும். வர்க்கங்கள் நிலவுவது உற்பத்தி வளர்ச்சியின் திட்டவட்டமான வரலாற்று கட்டங்களுடன் தொடர்பு கொண்டது என்று மார்க்ஸ் கருதுகிறார். ஒடுக்குவோர் ஒடுக்கப்படுவோர் என்று சமூக பிளவுபட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. பண்டைக் கூட்டுச் சமூகம் வர்க்கங்களற்ற சமூகமாக விளங்கியது. இச் சமுதாயத்தில்

உற்பத்திச் சக்தி கூட்டாக உழைப்பதைக் கோரி நின்றது. ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சமமாக உழைத்தனர். இதனால் எல்லாருக்கும் ஒரே மாதிரியான உரிமைகளும் கடமைகளும்இருந்தன. இது பற்றி ஏங்கெல்ஸ், “குடும்பம், தனிச்சொத்து, அரசு தோற்றம்” எனும் நூல் பின்வருமாறு குறிப்பிட்டார்: “சமுதாயத்தில் ஆரம்பக் கட்டங்களிலெல்லாம் உற்பத்தி எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. உழைப்பாளிகள் என்று ஒரு வர்க்கமும், இன்னொரு வர்க்கமும் இருக்கவில்லை. மனிதர்கள் உற்பத்தி செய்த பொருட்களை எல்லோரும் பொதுவிலே அனுபவித்து வந்தார்கள். அதுதான் புராதன பொதுவுடமை ஆகும்” (மார்க்ஸ், ஏங்கெல்ஸ், 1989, தொகுதி. XI, 286).

ஆனால், காலப்போக்கில் பண்டையக்கூட்டுச் சமூகம் வளர்ச்சி அடைந்ததன் விளைவாக உழைப்பின் முதலாவது பெரிய சமூகப் பிரிவினை தொடங்கியது. பயிர்த் தொழிலில் தொடக்ககால வடிவங்களில் ஈடுபட்டுவந்தவர்கள் கூடவே காட்டு விலங்குகளைப் பழக்கி வளர்ப்பதையும் விருத்தி செய்வதையும் முக்கிய தொழிலாகக் கொண்ட குலங்கள் படிப்பயாக தோன்றியதால் இது ஏற்பட்டது. இவ்வாறு கால்நடை வளர்ப்பு உழவு தொழிலிருந்து பிரிந்தது. உழைப்பின் சமூகப் பிரிவினை இத்துடன் நின்றுவிடவில்லை. அது படிப்படியாக வளர்ச்சியடைந்து சென்றது. இதுவும் சமச்சீரற்ற வர்க்க நிலைப்பாட்டிற்கு வழிவிட்டது.

அடிமைச் சொந்தக்காரச் சமூகமே முதலாவது வர்க்கச் சமூகமாகவும் சுரண்டலின் முதல் வடிவமாகவும் உள்ளது (ஏங்கெல்ஸ், 1989, vol. xi: 289). அடிமைகளும் அடிமைச் சொந்தக்காரர்களும் இதன் பிரதான வர்க்கங்களாக விளங்கினர். அடிமைச் சொந்தக்காரர்கள் செல்வத்தையும் அதிகாரத்தையும் தங்கள் கைகளிலே குவித்து வைத்துக்கொண்டு அடிமைகளை இரக்கமின்றிச் சுரண்டியதன் மூலம் வாழ்ந்துவந்தார்கள்.

சமூகம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்ததற்கு ஏற்ப, ஒரு உற்பத்தி முறையிலிருந்து இன்னொரு உற்பத்தி முறைக்குப் பரிணமிப்பு நிகழ நிகழ வர்க்க முரண்பாடுகள் மேலும் அதிகமாக வளரக்கூடிய வடிவத்தை அடைந்தன. நிலப் பிரபுத்துவ சகாப்தத்தில் அடிமைகளுக்கும் அடிமைச் சொந்தக்காரர்களுக்கும் பதிலாக நிலப்பிரபுக்கள், குடியானவர்கள் என்ற எதிர் நிலையான வர்க்கங்கள் வந்தன. இதைத் தொடர்ந்து பூர்ஷுவா அமைப்பு நிலப் பிரபுத்துவ உறவுகளைத் தவிர்த்துவிட்டுப் புதிய வர்க்க எதிர் நிலையைத் தோற்றுவித்தது. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள எதிர்நிலை அது. இந்த அமைப்புகளில் ஒவ்வொன்றும் வர்க்க ஆதிக்கத்தின் வெளித் தோற்றத்தில் மட்டுமே வேறுபாடாயிருந்தது. அவற்றின் தன்மை ஒன்றேதான். அதாவது, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கி ஒடுக்குவதும் சுரண்டுவதும் உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் சொத்துரிமை இந்த அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் காரணமாக இருந்தது. எனவே வர்க்கங்கள் தோன்றியதற்கும் சுரண்டுவோர் சமூகங்கள் வர்க்கங்களாகப் பிரிவுபட்டதற்கும் அடிப்படைக் காரணம் உற்பத்திக் கருவிகள் மீதும் சாதனங்கள் மீதும் தனியார் சொத்துரிமை நிலவியதுதான் என்று மார்க்ஸியம் உறுதியாக நம்புகிறது.

அடிமைச் சொந்தக்காரர், நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவச் சமூகங்கள் ஒவ்வொன்றினதும் வர்க்க அமைப்பு சிக்கலான தன்மை கொண்டது. இந்தச் சமூகங்களின் அடிப்படை வர்க்கங்கள் அடிப்படையற்ற வர்க்கங்களிலிருந்து தனியாகப் பிரிக்கப்படுகின்றன. ஆதிக்கத்தில் இருக்கும் உற்பத்தி முறையுடன் தொடர்புகொண்ட வர்க்கங்கள் அடிப்படையானவை ஆகும். அடிமைச் சொந்தக்காரச் சமூகத்தில் அடிமைச் சொந்தக்காரர்களும் அடிமைகளும், நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலப்பிரபுக்களும் குடியானவர்களும். முதலாளித்துவச் சமூகத்தில் பூர்ஷுவாக்களும் பாட்டாளிகளும் அடிப்படை வர்க்கங்கள் ஆவர். ஆதிக்கம் வகிக்கும் உற்பத்தி முறைக்குள் நேரடியாக வராத பொருளாதார கூறுகள் அடிப்படையற்ற வர்க்கங்கள் தோன்றுவதற்கு ஏதுவாகின்றன.

எதிர்நிலையான, சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகள் கொண்ட வர்க்கங்கள் தோன்றியதன் விளைவாகச் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் ஏற்படுகிறது. வர்க்கப் போராட்டத்துக்குத் தனிவரலாறு உண்டு. மார்க்ஸ் மூலதனத்தில் குறிப்பிடும் போது: "புராதன உலகில் வர்க்கப் போராட்டங்கள் கடன் பட்டவர்களுக்கும் கடன்கொடுத்தவர்களுக்கும் இடையிலான போட்டியின் வடிவிலேயே பிரதானமாய் நடைபெற்றன" என்றார் (மார்க்ஸ், 1998: 190).

ஒடுக்கப்பட்டவர்களும் உரிய பங்கை இழந்தவர்களும் நடத்திய ஆரம்பகால, போராட்ட நடவடிக்கைகளாகத் தொடங்கிய இப்போராட்டம் பெருந்திரளான, ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் தற்காலப் போராட்டமாக வளர்ந்திருக்கிறது. சமரசப்படுத்த முடியாத வர்க்கங்கள் கொண்ட எல்லாச் சமூகங்களதும் வரலாறு வர்க்கங்களது போராட்டத்தின் வரலாறே ஆகுமென கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸக் கட்சி அறிக்கையில் கூறினார் (மார்க்ஸ், ஏங்கெல்ஸ், 1975: 41).

ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் தீராய்ப் பகை கொண்டோராய் ஒருநேரம் மறைவாகவும் மற்றொருபுறம் பகிரங்கமாகவும் இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதும் புரட்சிகரப் புத்தமைப்பிலோ அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று. பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்தெழுந்துள்ள முதலாளித்துவ சமுதாயம் வர்க்க பகைமைகளுக்கு முடிவு கட்டிவிடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறைகளாகவும் புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்கிறதே அன்றி வேறில்லை. ஆயினும், நமது சகாப்தமாகிய இந்த முதலாளித்துவ வர்க்கச் சகாப்தத்தின் ஒரு தனி இயல்பு என்னவெனில், வர்க்கப் பகைமைகளை இது சுருக்கி எளிமையாக்கியுள்ளது. "சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இருபெரும் வர்க்கங்களாய் - முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய் - பிளவுண்டு வருகிறது" என மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் (அ.நூ. 41, 42, 43).

வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே உற்பத்திச் சக்திகள் புதிய சமுதாயத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைப்பதும் இயற்கைக்கு அடிமையாகியுள்ள மனித குலத்தை விடுவிப்பதில் முன்னேற்றம் காண்பதும் சாத்தியமாகும். இரு வகுப்பினருக்கும் இருவகையான உற்பத்திகளுக்கிடையே நிலவிய தகராறு இலட்சியங்களுக்கிடையிலான தகராற்றைப் பிரதிபலிப்பதாகவும் மார்க்ஸ் கருதினார். இவ்வர்க்கப் போராட்டமானது இறுதி நிலையை அடையும்போது, எவ்வாறு முதலாளித்துவ வர்க்கத்தின் நிலை இருக்குமென்பதை மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "வர்க்கப் போராட்டம் முடிவுகட்டும் நிலையை நெருங்கும் நேரத்தில் ஆளும் வர்க்கத்தினுள்ளும் பழைய சமுதாயம் அனைத்தினுள்ளும் நடந்தேறும் சிதைவுப் போக்கானது, அவ்வளவு உக்கிரமுற்று பட்டவர்த்தனமாகி விடுவதால், ஆளும் வர்க்கத்திலிருந்து ஒரு பகுதி துண்டித்துக் கொண்டு அதனிடமிருந்து விலகி எதிர்காலத்தை தன் பிடியில் கொண்டிருக்கும் வர்க்கமாகிய புரட்சி வர்க்கத்துடன் சேர்கிறது. இதற்கு முந்திய காலத்தில் எப்படி பிரபுக்களில் ஒரு பிரிவினர் முதலாளி வர்க்கத்திற்குச் சென்றார்களோ, அதேபோல் இப்போது முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத்திற்குச் செல்கின்றனர்" (பார்க்க, அ.நூ.)

பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற, வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத விதத்தில் தொழிலாள வர்க்கத்தில் சமூகப் புரட்சிக்கு இட்டுச் செல்லுகின்றது. சமூக புரட்சியின் மூலம் வர்க்கங்கள் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டால் அடக்குமுறை, அசமத்துவம், வறுமை ஆகியவைகளின் அடிப்படைக் காரணங்களும் பூரணமாக அகற்றப்பட்டுவிடும் என்று மார்க்ஸ் கருதினார்.

**முடிவுரை**

மார்க்ஸிசமும் மார்க்ஸிய பொருளாதாரக் கருத்துக்களும் சமகால பொருளாதார வரலாற்று ஆய்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கல்விசார் வட்டத்தில் மார்க்ஸியத்தை விவாதிப்பதனால், மார்க்ஸிச கருத்துக்கணிப்புகள் உட்பட பொருளாதார ஆய்வுகளின் அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மரபார்ந்த அரசியல் பொருளாதார வர்க்க கோட்பாட்டில் உள்ள அறிவியல் கூறுகள், மார்க்ஸிச வர்க்க கோட்பாட்டினால் பாதுகாக்கப்பட்டுவிட்டன என்று கூறுகிறது. மார்க்ஸ் மூலதனத்தின் பணியுடன் இந்த முன்னோக்கை ஒருங்கிணைக்கிறார். உழைப்புப் பிரிவினை, மூலதனத் திரட்டல், வர்க்கம் - வர்க்கப் போராட்டம் போன்றன மார்க்ஸிய மெய்யியலில் உள்ள அக்கறைக்குரிய கூறுகளாகும். இது சமூக யதார்த்த பகுப்பாய்வின் பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. அவ்வாறே இது அரசியல் பொருளாதாரம் சமூக நிகழ்முறை பற்றிய விசாரணையின் ஒரு முறையாக அதன் குறிப்பிட்ட அர்த்தத்தைக் கொடுக்கும் அம்சங்களின் கலவையாகவும் இவை உள்ளன.

**உசாத்துணைகள்**

1. கார்ல் மார்க்ஸ். (1975) மெய்யறிவின் வறுமை, மொழி பெ: ஆர்.கே. கண்ணன், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
2. _________(1976) பிரான்சில் வர்க்கப் போராட்டம், மொழி பெ: மோகன், சென்னை, நியூ செஞ்சுரி.
3. ________(1998) மூலதனம், தொகுதி, i, ii, iii, மொழி பெ: தியாகு, சென்னை, நியூ செஞ்சுரி.
4. ஏங்கெல்ஸ், பி., (1979) டூரிங்குக்கு மறுப்பு, மொழி பெ: கே. ராமநாதன், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
5. மார்க்ஸ், ஏங்கெல்ஸ் (1975) கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, மொழி பெ:ரா. கிருஷ்னையா, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
6. ________ (1984) தேர்வு நூல்கள், தொகுதி- i, (தமிழ் மொழி பெயர்ப்பு), மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
7. ________ (1989) தேர்வு நூல்கள், தொகுதி - xi, (தமிழ் மொழி பெயர்ப்பு), மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
8. அனஸ், எம்.எஸ்.எம்., (1996) விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு, பேராதனை, பண்பாட்டு ஆய்வு வட்டம்.
9. றியால், ஏ.எல்.எம். (2015), "மூலதனம்" நூலில் மார்க்ஸ் பயன்படுத்திய சமூகப் புரட்சி பற்றிய விளக்கம், "கலாம்" சர்வதேச ஆய்விதல், கலை மற்றும் பண்பாட்டுத் துறை,
10. இலங்கைத் தென் கிழக்கு பல்கலைக்கழகம், தொகுதி, ix.
11. லெவ் லியோன்டியெவ், (1975) அரசியல் பொருளாதாரம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்.
12. Ilyenkov, E.V., (1983) Dialectics of the Abstract and Concrete in Marx's Capital, USA, Victor Kamkin.
13. Marx, K., (1961) Economic and Philosophic Manuascripts of 1844, Trans: Martin
14. Milligan, Moscow, Foreign Languages Publishing House.